# நுகர்வோர் விவகார அதிகாரசபை - 2011

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்த நுகர்வோர் விவகார அதிகார சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இற்கமைய சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கத்திடமிருந்து பெறப்படும் மானியம் வருமானத்தில் கணக்கிடப்படும் போது பிற்போட்ட வருமானக் கணக்கு மீதியானது அரசாங்க மானியத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களது தேறிய பெறுமதிக்குச் சமமாக அமைய வேண்டுமாயினும், நிதிக்கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்ட பிற்போட்ட வருமானம் ரூபா 35,351,536 ஆகவிருந்தபோதும், சொத்துக்களின் தேறிய பெறுமதி ரூபா 28,742,326 ஆகியமையால் ரூபா 6,609,210 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அதிகாரசபை 2012 பெப்ரவரி 28 ஆந் திகதியன்று வரைவு நிதிக்கூற்றுக்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருந்தது கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகளுக்கான ரூபா 6,410,195 சீராக்கல் செய்யப்பட்டதன் பின்னர், 2012 ஆகஸ்ட் 20 ஆந் திகதியன்று அதிகாரசபை நிதிக்கூற்றுக்களை மீளத் தயாரித்துச் சமர்ப்பித்திருந்தது. ஆகவே அவ்வாறான கணக்கீட்டுக் குறைபாடுகள் தொடர்ந்தும் இராமையை கணக்காய்வின் போது தவிர்க்க முடியாதுள்ளது.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| **(அ) 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரச்சட்டம்** | |
| (i) 3(1) ஆம் பிரிவு | அதிகாரசபையின் அங்கத்தவர்கள் குறித்த துறைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகமைகள், அனுபவம், புலமை என்பவற்றைக் கொண்டவர்களாக இருக்க வேண்டுமாயினும், 2011 ஆம் ஆண்டில் குறித்த தகமைகளைப் பெற்றிராத 8 பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) 27 ஆம் பிரிவு | நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரிடம் விசாரித்துத் தீர்மானம் செய்யும் ரூபா 100,000 க்கு மேற்படாத வருடாந்தக் கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் சகல வர்த்தகர்களும் அதிகார சபையில் பதிவு செய்யப்பட வேண்டும். எனினும், இதுவரை வர்த்தகர் எவரையும் பதிவு செய்வதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்த) அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 4(2) ஆம் பிரிவினது உப விதிகள் | 2012 ஜனவரி 17 ஆந் திகதியன்று கொடுப்பனவு செய்யப்பட்ட 2010 ஆம் ஆண்டினது மருத்துவ லீவுச் சேமிப்புக் கொடுப்பனவு தொடர்பாக அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய வரி அட்டவணை 02 இன் படி கணிப்பிடப்பட்ட உழைக்கும் போதே செலுத்தும் வரி அறவிடப்படவில்லை. |

**(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்**

| | |
|---|---|
| (i) நி.பி 133 மற்றும் 134 என்பன | புதிய கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் தொடர்புடைய கணக்காய்வு நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் என்பவற்றிக்குப் போதிய பதவியணியினரை ஈடுபடுத்துதல், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும் எனினும், தொடர்புடைய நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு உள்ளகக் கணக்காய்வாளரை விட போதிய பதவியணியினர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 371 (2) (ஆ) | ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கப்படக்கூடிய ஆகக் கூடிய இடைக்கால கட்டுநிதி ரூபா 20,000 ஆகும். எனினும், பிரமாணங்களுக்கு முரணாக, அவ்வரம்பை மீறி 2011 ஆம் ஆண்டின் போது 40 சந்தர்ப்பங்களில் இடைக்காலக் கட்டுநிதியாக ரூபா 2,940,800 வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) நி.பி 371 (5) | வழங்கப்பட்ட இடைக்காலக் கட்டுநிதி நிதியாண்டின் திசெம்பர் 31 க்கு முன்னர் திருப்பியளிக்கப்பட வேண்டுமாயினும், அத் தினத்தில் உள்ளவாறு இடைக்காலக் கட்டுநிதியாகிய ரூபா 852,600 தீர்த்து வைக்கப்படாதிருந்தது. |

**(ஈ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை**

| | |
|---|---|
| (i) 8.3.4 ஆம் பந்தி மற்றும் 2010 செப்தெம்பர் 01 ஆந் திகதிய பீஎப்/எப்எஸ்/05/(viii) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை நிறைவேற்றுவதற்குப் பயன்படுத்தும் தொலைபேசி மற்றும் இணையதள வசதிகள் சம்பந்தமாக அதிகூடிய மாதாந்த ஒருங்கிணைந்த செலவின வரம்பு கடைப்பிடிக்கப்பட வேண்டுமாயினும், அதிகாரசபையின் 6 உத்தியோகத்தர்களுக்கு அவ்வரம்பை மீறிச் செலவழிப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. |
| (ii) 8.3.5 ஆம் பந்தி மற்றும் 1999 ஒக்டோபர் 01 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது | “சீ” வகுப்பு நிறுவனங்களில் தலைவர் பிரதான நிறைவேற்றுதர உத்தியோகத்தர், நிறைவேற்றுதரப் |

| | | |
|---|---|---|
| | நிர்வாகச் சுற்றறிக்கை | பணிப்பாளர் ஆகியோருக்கு மாத்திரமே வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்படலாம். எனினும், சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்களுக்கு முரணாக, சுற்றறிக்கைக்கு உட்படாத அதிகார சபையின் 4 பணிப்பாளர்களுக்கும் நுகர்வோர் மன்றச் செயலாளருக்கும் ரூபா 43,000 மற்றும் பிரதி உதவிப் பணிப்பாளர்களுக்கு ரூபா 7,500 என மாதாந்த போக்குவரத்துப்படி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட மொத்த போக்குவரத்துப்படி ரூபா 3,025,500 ஆகும். |
| (iii) | 9.3.1 ஆம் பந்தி | குறிப்பிடப்பட முடியாத கால எல்லைக்கு பதில் கடமையாற்றும் பதவிகளின் வாயிலாக வெற்றிடங்கள் நிரப்பப்படலாகாது. எனினும், சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்துரைக்கு முரணாக அதிகாரசபையின் 8 உத்தியோகத்தர்கள் 3 தொடக்கம் 22 மாதங்கள் வரையான காலப்பகுதியின் போது பதில் கடமையாற்ற/கடமைகளை நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்பட்டிருந்தனர். |
| (iv) | 9.2 மற்றும் 9.3.1 (i) ஆம் பந்திகள் மற்றும் 2010 பெப்ரவரி 08 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஈ4/41/5/255/2 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் திணைக்களக் கடிதம் | சகல நிறுவனங்களுக்கும் பொது முகாமைத்துவத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை இருக்க வேண்டும். எனினும், முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை இல்லாது அதிகாரசபை ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு என்பவற்றை வழங்கியிருந்தது. |
| (v) | 9.10 ஆம் பந்தி | ஒப்பந்த, சமயாசமய, ஏனைய ஆட்சேர்ப்பு என்பன திறைசேரியின் செயலாளரது அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது 20 ஊழியர்களைச் சேவையிலமர்த்தி ரூபா 4,720,678 சம்பளமும் படியுமாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 2010 திசெம்பர் 7 ஆந் திகதிய 150 ஆம் இலக்க வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கை மற்றும் 2003 | வாடகை வாகனங்களைப் பயன்படுத்தும் அரச நிறுவனங்கள் வாடகைக் கொள்வனவு |

| | | |
|---|---|---|
| | மார்ச் 28 ஆந் திகதிய எம்எப்/டீஆர்/1/2003 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் கடிதம் | அடிப்படையில் வாகனங்களைப் பெறுவதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். எனினும், சுற்றறிக்கைக்கு முரணாக, அதிகார சபை வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றிருந்ததடன் 2011 ஆம் ஆண்டில் வாகனங்களுக்கு வாடகையாக ரூபா 14,692,581 செலுத்தியுமிருந்தது. 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது 538 சதவீத அதிகரிப்பாகும். |
| (ஊ) | 2010 செப்தெம்பர் 20 ஆந் திகதிய சீஏஏ/ஏஎச்ஆர்/74/2010 ஆம் இலக்க பணிப்பாளர் சபைக் குறிப்பு | புதிய ஊடக இணையதளமாக டயலொக் தொலைபேசியை அறிமுகஞ் செய்வதன் மூலம் அதிகாரசபையின் மாதாந்த தொலைபேசிக் கட்டணத்தை 30 சதவீதத்தால் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும், 2010 ஆம் ஆண்டின் ரூபா 1,243,003 தொலைபேசிச் செலவினம் மீளாய்வாண்டில் ரூபா 2,289,205 ஆகியமையால் 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 84 சதவீதத்தால் அதாவது ரூபா 1,046,202 அதிகரித்திருந்தது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான அதிகார சபையின் செயற்பாடுகளால் விளைந்த மிகை ரூபா 12,618,138 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 21,763,716 ஆகும். இதனால் நிதிசார் விளைவுகளில் ரூபா 9,145,578 குறைவு தென்பட்டது. ஆளுக்குரிய வேதனம், ஒப்பந்தச் சேவைகள் மற்றும் பிற செயற்பாட்டுச் செலவினங்களில் அதிகரிப்பு அதற்குப் பிரதான காரணிகளாக அமைந்தன. மேலும் அதிகார சபையின் முன்னைய ஆண்டினது செயற்பாட்டுச் செலவினம் ரூபா 140,960,486 ஆகிய போதும் மீளாய்வாண்டின் போது அது ரூபா 194,667,564 ஆகியமையால் ரூபா 53,707,078 அதாவது, 38.1% செலவின அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திறன்

**கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 39 ஆம் பிரிவின் கீழ் நுகர்வோர் விவகார மன்றம் தாபிக்கப்பட்டுள்ளதுடன் அந்த அதிகாரச் சட்டத்தின் 41(3) ஆம் பிரிவின் பிரகாரம் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு அதிகாரச் சட்டத்தின் 37 ஆம் 38 ஆம் பிரிவுகளின் கீழ் மன்றத்திடம் கோரிக்கை விடுவிக்கப்படும் போது அக்கோரிக்கை கிடைக்கப் பெற்று ஒரு மாதத்திற்குள் அது தொடர்பாகத் தீர்மானம் மேற்கொள்வது மன்றத்தின் பணியாகும். எனினும், அதற்கு முரணாக 2010 ஆம் ஆண்டில் பெறப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக 2011 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் 2011 ஆம் ஆண்டில் ஒரேயொரு கோரிக்கையே பெறப்பட்டதாகவும் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. மன்றத்தின் பொருட்டு 2011 ஆம் ஆண்டிற்கெனச் செலவிடப்பட்ட தொகை ரூபா 2,464,925 ஆகும்.

(ஆ) 2011 ஒக்டோபர் 17 ஆந் திகதிய 1728/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் பெயர் குறிப்பிடப்பட்ட 37 வகைப் பொருட்களுக்கு பிளாஸ்டிக் மற்றும் கடதாசி அல்லது மரத்தாலான உறைகள் பயன்படுத்தப்பட வேண்டுமெனும் கட்டளை 2012 ஜனவரி 13 ஆந் திகதிய 1740/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 21 வகைப் பொருட்களாக குறைக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகளுக்காக அதிகார சபையும் அமைச்சும் முறையே ரூபா 673,348 மற்றும் ரூபா 18,017,340 எனச் செலவிட்டிருந்தன. தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கான செலவினத்திற்கு ஈடாகும் விதத்தில் நலன் கிடைக்கப்பெற்றதற்கான சான்று இருக்கவில்லை.

(இ) 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகார சபையின் 8(ஈ), (ஏ) மற்றும் (ஓ) தொடக்கம் (ஔ) வரையான பிரிவுகளின் பிரகாரம் நுகர்வோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல், பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்குதல், நுகர்வோர் அமைப்புக்களை உருவாக்குதல், மேம்படுத்தல் போன்றன அதிகார சபையால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளாகும். எனினும், 2011 ஜனவரி முதல் டிசெம்பர் வரையான காலப்பகுதியின் போது கீழே குறிப்பிடப்பட்டவாறு மாவட்ட அலுவலகங்களிலிருந்து அனுப்பப்பட்ட

முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் அப்பணிகள் நிறைவேற்றப்படுவதானது நலிவுற்ற நிலையில் இருக்கக் காணப்பட்டது.

| **மாவட்டம்** | **நுகர்வோர் அமைப்புக்களை தாபித்தல்** | **நுகர்வோர் கல்வி அமைப்புகளை ஒழுங்கு செய்தல்** |
|---|---|---|
| களுத்துறை | இல்லை | 01 |
| அம்பாந்தோட்டை | இல்லை | இல்லை |
| வவுனியா | இல்லை | இல்லை |
| மொனராகல | இல்லை | 08 |
| அம்பாறை | இல்லை | 03 |
| கண்டி | இல்லை | 02 |
| புத்தளம் | 04 | இல்லை |
| கம்பஹா | 03 | இல்லை |

### 3.2 பயன்படுத்தாதும் குறைவாகப் பயன்படுத்துவதுமான சொத்துக்கள்

நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் அரசாங்க கடன்பட்டோர் எனக்குறிப்பிடப்பட்ட நுகர்வோர் பாதுகாப்பு நிதிசார் கணக்கு மீதியில் ரூபா 21,837,975 திறைசேரியில் செயற்பாடற்ற கணக்காக 2004 தொடக்கம் மீளாய்வாண்டு வரை இருந்து வந்ததுடன் 2012 ஆகஸ்ட் மாதமளவில் அத்தொகை மீளப்பெறப்பட்டு நிதியத்தை உருவாக்கியதன் நோக்கத்திற்கு முரணாக வாடகை வாகனங்களுக்குச் செலவழிக்கப்பட்டிருந்தது.

### 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

சேமிப்புக்குள்ளான மருத்துவ லீவாகிய 21 நாட்களுக்குக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் அதிகார சபையின் திட்டத்திற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதும் அதற்கு முரணாக 2005 தொடக்கம் 2011 வரையான காலப்பகுதியின் போது 7 வருடாந்த லீவுத் தினங்களுக்கும் மொத்தமாக ரூபா 3,268,187 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.4 பிற அரச நிறுவனங்களுக்கு வழங்கிய அதிகார சபையின் வளங்கள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நேரடி அமைச்சில் பணியாற்றும் பெண் உத்தியோகத்தர் ஒருவரினதும் அமைச்சரின் பதவியணியில் ஊடகச்செயலாளராக இருப்பவரினதும் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்கான தொலைபேசிக் கட்டணம் மற்றும் சம்பளம் ஆகிய முறையே ரூபா 314,000, ரூபா 180,000 என்பன அதிகார சபை நிதியிலிருந்து வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சிற்கு உரிய டிபெண்டர் வாகனத்தைப் பழுதுபார்ப்பதற்கும் அதற்கான சேவைகளுக்கும் அதிகார சபை நிதியிலிருந்து ரூபா 3,361,475 செலவழிக்கப்பட்டிருந்தது. இதனை மீளளிப்பதற்கான கோரிக்கையை அமைச்சு நிராகரித்திருந்தது.

## 3.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்குரிய அதிகார சபையின் பதவியணி ஊழியர் ஒருவரது சராசரி ஆகு செலவு போன்ற தகவல்கள் கணக்காய்விற்குக் கோரப்பட்ட போதும் 2013 ஜனவரி 09 வரை அத் தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) முறையான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை இல்லாது மீளாய்வாண்டின் போது 89 ஊழியர்கள் புதிதாக ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(இ) அதிகாரசபையின் பதவியணிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்ட தகமைகளும் அனுபவங்களும் அற்ற விண்ணப்பதாரர் ஒருவர் 2008 பெப்ரவரி 15 ஆந் திகதியன்று நிதிப் பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். அவ்வாறிருக்கையில், அக் குறித்த விண்ணப்பதாரரால் ஆரம்பச் சம்பள அளவுத்திட்டத்தில் அமர்த்தப்படாது 2 சம்பள ஏற்றங்களுடன் அமர்த்தப்பட்டமையால் 2008 பெப்ரவரி 15 முதல் 2011 திசெம்பர் 31 வரை ரூபா 101,200 கூடுதல் சம்பளம் வழங்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களி தகைமையும் சிறந்த ஆளுகையும்

### 4.1 கூட்டுத்திட்டம்

அதிகாரசபை தயாரித்த கூட்டுத் திட்டம் 3 ஆண்டுகளுக்குக் குறையாத குறித்த காலத்திற்கென தயாரிக்கப்பட்டிராமையால் அது வருடா வருடம் முன்கொண்டு செல்லப்பட்டவாறிருக்கும் பதிவேடு ஒன்றாகவே அமைந்தது. அதன் காரணமாக, எந்தவொரு காலப்பகுதியிலேனும் அதிகாரசபை எய்துவதற்கிருந்த நோக்கம் / இலக்கு என்பவற்றைக் குறிப்பாக இனங்காண்பது சிக்கலானதாக காணப்பட்டது.

### 4.2 செயற்பாட்டுத் திட்டம்

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) செயற்பாட்டுத் திட்டத்தினூடாக குறித்த காலப்பகுதியின் போது எய்துவதற்கு எண்ணியுள்ள பணிகளைத் தெளிவுற இனங்காண முடியுமாயினும், அதிகார சபை தயாரித்த செயற்பாட்டுத் திட்டத்தில் நிலவிய குறைபாடுகளும் தெளிவின்மையும் காரணமாக அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை எய்த முடியுமா என்பதை உறுதி செய்ய முடியாதிருந்தது.

(ஆ) செயற்பாட்டுத் திட்டத்தின் 5.4.a, 5.4.b, 5.4.c ஆகிய விடயங்களின் பிரகாரம், செயற்திறன் மற்றும் ஏனைய பயிற்சிக்கான சந்தர்ப்பங்களை இனங்காணுதல், பதவியணிக்கான ஊழியர் பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களை வழங்குதல், பதிப்பாய்வு செய்தல் என்பன மேம்பாட்டுப் பிரிவின் பொறுப்பாகக் குறிப்பிடப்பட்ட போதும் 2011 ஆம் ஆண்டில் ஒரு உத்தியோகத்தரை நிகழ்ச்சித் திட்டமொன்றில் பங்குபற்றச் செய்தது மாத்திரமே முன்னேற்றமாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

(இ) அவ்வாறே, அதிகார சபை தயாரித்த செயல் திட்டத்தில் உள்ளடங்கிய 8 விடயங்கள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 4.3 வருடாந்த அறிக்கை

2003 ஜுன் 2 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், நிதியாண்டு முடிவுற்று 150 நாட்களுக்குள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமாயினும், 2010 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை பாராளமன்றத்தில் 2012 ஆகஸ்ட் 24 ஆந் திகதியன்றே முன்வைக்கப்படுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டது.

## 4.4 பொது முயற்சிகள் மீதான குழுவினது கட்டளை செயற்படுத்தப்படாமை

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) 2011 நவம்பர் 14, 15 ஆகிய இரு நாட்களில் நடைபெற்ற பொது முயற்சிகள் மீதான குழுவினால் அதிகார சபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு முறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் பதில் கடமையாற்றும் அடிப்படையில் நியமிக்கப்பட்ட 8 உத்தியோகத்தர்களது பதவிகள் 3 மாதங்களுக்குள் நிரப்பப்பட வேண்டும் எனவும் கட்டளை பிறப்பிக்கப்பட்ட போதும், 2012 திசெம்பர் 24 ஆந் திகதியளவிலும் உள்ளகக் கணக்காய்வுக் பிரிவு முறையாக அமைக்கப்படுதற்கும் பதில் கடமையாற்றியோர் வெற்றிடங்கள் பதவி நிரப்பப்படுவதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 திசெம்பர் 22 ஆந் திகதிய சீஏஏ/எச்ஆர்ஏ/109/2010/ஏஓபீ – 10 – 02 பணிப்பாளர் சபைக் குறிப்பின் வாயிலாக 2011 ஆம் ஆண்டில் உசாத்துணையாளர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டு ரூபா 504,000 கொடுப்பனவு செய்யப்பட்டபோதும், இந்நியமனத்திற்கு மேற் குறித்த திகதியில் நடைபெற்ற பொது முயற்சிகள் மீதான குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட கட்டளைப் பிரகாரம் முறைப்படி அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 பணிப்பாளர் சபைக் கூட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டின் போது நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபை அங்கத்தவர் எண்ணிக்கை 24 ஆகும். எனினும், அதில் மூன்று அங்கத்தவர்கள் எந்தவொரு கூட்டத்திலும் கலந்து கொண்டிருக்கவில்லை.

(ஆ) ஏனைய அங்கத்தவர்கள் கூட்டத்தில் கலந்துகொள்வதும் ஒழுங்காக அமையவில்லை. ஆண்டின் போது நடைபெற்ற 12 கூட்டத் தொடர்களில் 10 கூட்டத்தொடர்களில் அவர்களது வருகை 50 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்பட்டது.

## 4.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

அதிகாரசபை தயாரித்த பாதீட்டில் நிலவிய கீழே குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் காரணமாக பாதீடானது சிறந்த நிதிக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(அ) நிதியேற்பாடின்றி 4 சந்தர்ப்பங்களில் ரூபா 22,837,824 செலவிடப்பட்டிருந்தது. 4 சந்தர்ப்பங்களில் மொத்த நிதியேற்பாடான ரூபா 6,730,000 செலவிடப்படாது எஞ்சியிருந்தது.

(ஆ) மதிப்பிடப்பட்ட செலவிலும் கூடுதலாக 9 விடயங்களுக்குச் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறு கூடுதலாகச் செலவிடப்பட்ட தொகை ரூபா 21,783,932 ஆகும்.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகார சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நுகர்வோர் புகார்களுக்கான அறிக்கைகளைப் பேணுதல்
(ஆ) வாகனக் கட்டுப்பாடு
(இ) நிலையான சொத்துக்கள்
(ஈ) கையிருப்புக் கட்டுப்பாடு
(உ) ஆளணி முகாமைத்துவம்